[1974 மார்ச் 6

Arecanut plantations

* 308 Q.—Thiru N. DENNIS

Thiru N. K. PALANISWAMY : Will the Hon the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the arecanut plantations at Kallar area in Coimbatore district has been infested with unknown diseases during September 1973; and

(*b*) if so, the steps taken thereon?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) தலைவர் அவர்களே, பாக்கு மரத்தைத் தாக்கிய புதிய நோய் பங்கிசைட், அது காலான் கொல்லி மூலம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, இந்த நோயினால் எவ்வளவு மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன? எவ்வளவு பாக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த நோய் தொடங்கியவுடனே அரசு அதிகாரிகள் சென்று அதை கட்டுப்படுத்தியிருக்கிறார்கள், ஆகையினால் பாதிப்பு கடுமையாக இருக்காது என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை

* 309 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தெய்வீகப் பேரவையின் இயக்குநர்கள் யார், யார்?

(இ) அதன் தலைவர் யார்?

(உ) அவர்களின் பணி எவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@ 362–363-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.